# மேட்டுப்பாளையம் நகராட்சி

30.09.2019ம் தேதி திங்கட் கிழமை மாலை **4.30** மணிக்கு நடைபெறவுள்ள
மேட்டுப்பாளையம் நகராட்சி நகர்மன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.

## <u>கூட்டப் பொருள்</u>

| | |
|---|---|
| 1.. | மேட்டுப்பாளையம் நகராட்சியில் மின் பணியாளர் நிலை – I ல் பணியாற்றி வரும் திரு. ஆர்.ராஜா என்பவர் 14/06/2019 ம் தேதிய விண்ணப்பத்தில் தனது வயதான தாயார் மற்றும் மாமனார் உடல் நிலை சரியில்லாத காரணத்தால் உடன் இருந்து கவனிக்க வேண்டியிருப்பதால் கோயமுத்தூர் மாநகராட்சிக்கு பணி இட மாறுதல் செய்து தருமாறு கோரி உள்ளார். அன்னாரது விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** : அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.1954/2019/இ2 |
| 2. | இந்நகராட்சிக்குச் சொந்தமான பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள பயணிகள் பொருட்கள் பாதுகாப்பு அறையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் மற்றும் வெள்ளிப்பாளையம் ரோட்டில் அமைந்துள்ள நவீன ஆடுவதை சாலையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் காலம் 31.12.2019 இல் மூன்றாண்டு குத்தகை காலம் முடிவடைய உள்ளதால் மீண்டும் 01.01.2020 முதல் மூன்றாண்டு காலத்திற்கு ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரவும், ஏல அறிக்கை அச்சிடவும் மற்றும் செய்தித்தாள் விளம்பர செய்யவும் உத்தேச செலவுத் தொகை ரூ.20,000/-ற்கும் மேற்கண்ட ஏலம் அரசாணைப் படி நடைமுறைப்படுத்தவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** : அனுமதிக்கலாம்<br>ந.க.எண்.4555/2017/அ1 |
| 3.. | நகராட்சியில் பயன்படுத்தப்பட்டு வரும் புதிய ஸ்கார்ப்பியோ வாகனம் எண்.தா40 எஸ்6535, 5000 கிலோ மீட்டருக்கு ஓடிவிட்டதால் இவ்வாகனத்தினை CAI INDUSTRIES (P) LTD கோவை என்கிற நிறுவனத்தில் முதல் சர்விஸ் செய்ய வேண்டி உள்ளதால் அதற்கு ஆகும் செலவினம் ரூ.5677/- ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** : 1). அனுமதிக்கலாம்<br>2). அவசர அவசியத்தை கருதி நகராட்சிகளின் விதி 15ன் கீழ் பணிமுடிக்கப்பட்டது. மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>ந.க.எண்.3322/2018/இ1 |

4

மேட்டுப்பாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.29 குமரபுரம் பொதுக் கழிப்பிடத்தில் உள்ள 5HP மோட்டார்காயில் ரீவைன்டிங் மற்றும் புதிதாக பைப்புகள் மாற்றி இயக்கவும் 20.08.2019 ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு 10.09.2019ல் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் முகவரி | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|
| 1 | M/s. R.V.எலக்ட்ரிக்கல், 25, A.R.R சாமிலைன், காட்டூர், கோயமுத்தூர். | ரூ.24,500/- | ரூ.21515/- |
| 2 | M/s அல்கெம் இண்டஸ்ட்ரீஸ் 32A, ஊட்டி ரோடு, மேட்டுப்பாளையம் | ரூ.24,500/- | ரூ.21221/- |

**அலுவலகக் குறிப்பு**

மேலே பெறப்பட்டஇரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.2ல் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி மற்றதை விட குறைவாக உள்ளதால் குறைவான ஒப்பந்தப்புள்ளியை அளித்துள்ள M/s அல்கெம் இண்டஸ்ட்ரீஸ் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க தண்ணீர் அவசர அவசியம் கருதி, மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.2643/2019/அ5

5

மேட்டுப்பாளையம் நகராட்சியில் பொது நிதி 2019-20ன் கீழ் கீழ்க்கண்ட பணிகளுக்கு 18.09.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் முகவரி | மதிப்பீடு இலட்சம் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண். 6ல் சொக்கலிங்கம் பிள்ளை வீதி நம்ம டாய்லெட் அருகில் உள்ள பழுதடைந்த பொதுக்கழிப்பிடத்தை இடித்து அகற்றுதல் மற்றும் நடூர் பகுதியில் திறந்தவெளி கிணற்றில் மழைநீர் சேகரிப்பு அமைத்தல் | ரூ.1.90 | ஸ்ரீ ஆஸ்க் சுஷ்மா இன்ஸ்பரக்சர்ஸ் | 0.09% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | ஸ்ரீசக்தி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | 1.24% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 2 | புதிய நகராட்சி அலுவலகத்தில் மேலாளர் அறையினை அமைத்தல் குடிநீர் சுத்திகரிப்பு கருவி மற்றும் கூடுதல் வசதிகள் செய்தல் | ரூ.4.00 | எம். வேலுசாமி | 2% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| | | | சி.நாகராஜ் | 0.01% மதிப்பீட்டிற்கு குறைவு |

மேற்காணும் பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்த்தாரரின் ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்

<table>
<tr>
<td>6.</td>
<td>
மேட்டுப்பாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.30 கே.கே நகர் மேல் நிலைத்தொட்டி அருகில் காரமடை பம்பின் மெயினிலிருந்து கே.கே.நகர் பகிர்மானக் குழாய்க்கு இன்டர்லிங் (Inter link) செய்து வால்வுகள் பொருத்த 20.08.2019ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு 10.09.2019ல் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் குழுவிற்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்.</th><th>ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் முகவரி</th><th>மதிப்பீட்டுத் தொகை</th><th>ஒப்பந்தப்புள்ளி விகிதம்</th></tr>
<tr><td>1</td><td>M/s. R.V.எலக்ட்ரிக்கல்,<br>25, A.R.R சாமிலைன், காட்டூர்,<br>கோயமுத்தூர்.</td><td>ரூ.2,60,000/-</td><td>ரூ.235,773/-</td></tr>
<tr><td>2</td><td>M/s அல்கெம் இண்டஸ்ட்ரீஸ்<br>32A, ஊட்டி ரோடு,<br>மேட்டுப்பாளையம்</td><td>ரூ.2,60,000/-</td><td>ரூ.231889.66/-</td></tr>
</table>
அலுவலகக் குறிப்பு :<br>
மேலே பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.2ல் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி மற்றதை விட குறைவாக உள்ளதால் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s அல்கெம் இண்டஸ்ட்ரீஸ் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க குடிநீர் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர் நோக்கி தனி அலுவலரின் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
ந.க.எண். 2969/2019/அ5
</td>
</tr>
<tr>
<td>7</td>
<td>
மேட்டுப்பாளையம் நகராட்சி திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நகராட்சியாக அறிவிக்கப்பட்டு (ODF) தொடர்ந்து அத்தகைய நிலையே கடைபிடிக்கப்பட்டு வருகிறது. தற்போது அதன் அடுத்த நிலையான (ODF +) சான்று பெறுவதற்கு நகராட்சி பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக இந்நகராட்சி பகுதியில் திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நிலை தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகிறது. என்ற சுய உறுதிமொழி சான்றிழக்கு (Self Declaration)நகர் மன்றம் அனுமதித்துள்ளது. இது குறித்து பொது மக்கள் தங்களின் ஆட்சேபணைகளை 15 தினங்களுக்குள் நகராட்சி அலுவலகத்தில் எழுத்து பூர்வமாக தெரிவிக்குமாறு 15.08.2019ம் தேதிய நாளிதழில் தெரிவிக்கப்பட்டிருந்தது தற்பொழுது வரை எவ்வித ஆட்சேபணையும் பொதுமக்களிடம் இருந்து பெறாத காரணத்தால் மேட்டுப்பாளையம் நகராட்சியை (ODF +) நகராட்சியாக அறிவிப்பு செய்திட நகர் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலக் குறிப்பு : அனுமதிக்கலாம்<br>
ந.க.எண். 682/2017/எச்1
</td>
</tr>
<tr>
<td>8</td>
<td>
மேட்டுப்பாளையம் நகராட்சி தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் நகராட்சியில் சேகரமாகும் குப்பைகள் முறையாக தரம் பிரித்து கையாளப்பட்டு வருகிறது. மேலும் குப்பைகளை தேக்கி வைத்தில் மற்றும் இரண்டாம் நிலை சேகரிப்பு முற்றிலும் தவிர்க்கப்பட்டு புதிய கழிவுகள் நகராட்சி உத்திரடலில் கொட்டப்படுவது. தவிர்க்கப்பட்டுள்ளது மத்திய அரசின் MOUD துறையின் மூலம் Star Ratingன் ஓவ்வொரு உள்ளாட்சி அமைப்பிற்கும் வழங்கப்படுகிறது.அதன் ஒரு பகுதியாக மேட்டுப்பாளையம் நகராட்சியை மூன்று நட்சத்திரம் அங்கீகாரம் ( Thee Star Rating) ம் பெற சுய உறுதி மொழி சான்றிதழக்கு ( Self Declaration) நகர் மன்றம் அனுமதித்துள்ளது. இதுகுறித்து பொது மக்கள் தங்களின் ஆட்சேபணைகளை 15தினங்களுக்குள் நகராட்சி அலுவலகத்தில் எழுத்து பூர்வமாக தெரிவிக்குமாறு 15.08.2019ம் தேதிய நாளிதழில் தெரிவிக்கப்பட்டிருந்தது. தற்பொழுது வரை எவ்வித ஆட்சேபணையும் பொதுமக்களிடம் இருந்து பெறாத காரணத்தால் மேட்டுப்பாளையம் நகராட்சியை Thee Star Rating அந்தஸ்து பெற்ற நகராட்சியாக அறிவிப்பு செய்திட நகர் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம்<br>
ந.க.எண்.850/2019/எச்1
</td>
</tr>
</table>

9. கோவை மாவட்டம் மதுக்கரை வட்டம் செட்டிப்பாளையம் கிராமத்தில் தமிழர்களின் பாரம்பரிய ஜல்லிக்கட்டு விழா 17.02.2019 ஆம் தேதியில் நடை பெற்றதற்கு இந்நகராட்சி பகுதியில் பொது மக்கள் பார்த்து பயன்பெறும் வகையில் Brand Media நிறுவனம் மூலம் 10 பதாகைகள் வைத்து விளம்பரம் செய்யப்பட்டது. மேற்படி விளம்பர பதாகைகள் தயார் செய்த Brand Media நிறுவனத்திற்கு ரூ.44840/-ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம்

ந.க.எண்.3388/2019/இ1

10. மேட்டுப்பாளையம் நகராட்சியில் 10.09.2019 அன்று கீழ்க்காணும் பணிக்கு கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புநோக்குப்பட்டியல் கீழ்க்கண்டவாறு தயார் செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் மற்றும் முகவரி | மதிப்பீடு ரூ. இலட்சம் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண். 32ல் மணி நகர் உயர்நிலைப்பள்ளியில் உள்ள தெற்குப்புற கட்டிடத்தில் ஏற்கனவே உள்ள ஒடுகளை அகற்றி கான்கிரீட் மேற்கூரை அமைத்து மராமத்து பணிகள் செய்தல் | ரூ.9.50 | சி.நாகராஜ் | 0.11% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | எம்.வேலுசாமி | 3.47% மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்காணும் பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. சி. நாகராஜ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : மன்றத்தின் அனுமதி வழங்கலாம்

11 மேட்டுப்பாளையம் நகராட்சியில் உள்ள மக்காத குப்பைகளை தரம்பிரிக்கப்பட்டு Processing சிராஜ் நகர் பகுதியில் உள்ள நகராட்சி உரக்கிடங்கில் செயல்பாட்டில் உள்ளது. இந்த மையம் திறந்த வெளியாக உள்ளதால் போதிய பாதுகாப்பில்லாமல் உள்ளது. இதனால் இம்மையத்திற்கு தடுப்புகள் மற்றும் சில மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ள ரூ. 3.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மன்ற அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

இப்பணியின் அவசரம் அவசியம் கருதி பணியினை மேற்கொள்ள முன் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| 12. | மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு சொந்தமான வெள்ளிப்பாளையம் ரோட்டில் அமைந்துள்ள மாட்டிறைச்சி கடை எண்கள் 2,3,5,6 ஆகியவைகளை சென்னை உயர்நீதி மன்ற வழக்கு எண். W.P.No 19638 முதல் 19641 of 2003 தீர்ப்பிற்கிணங்கவும் 03.07.2019ல் தேதியிட்ட அரசாணை 92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை ஆணைக்கிணங்கவும் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடத்தப்பட்டது.<br>அதன்படி மாட்டிறைச்சி கடை எண். 2,3,5 மற்றும் 6 ற்கு ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், ஏலத்தில் கலந்து கொள்ள எவரும் முன் வரவில்லை. கீழ்க்கண்டுள்ள விபரப்படி 27.09.2019ல் நான்காவது அழைப்பில் ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. |

| கடை எண்கள் | பெயர் மற்றும் முகவரி | மாதவாடகை |
|---|---|---|
| 2 | எம்.ஜிலானி<br>66ஏ, அண்ணாஜிராவ் ரோடு,<br>மேட்டுப்பாளையம் | ரூ.2140/- |
| 3 | ஏ.சல்மான்பாரீஸ்<br>16, ராமசாமி நகர்,<br>பாலப்பட்டி ரோடு | ரூ.2120/- |
| 5 | ஏ.எம்.ஜாபர்,<br>261/73, சிறுமுகை ரோடு,<br>சீரங்கராயர் ஓடை,<br>மேட்டுப்பாளையம் | ரூ.2150/- |
| 6 | எம்.நூர்ஜஹான்<br>261/73, சிறுமுகை ரோடு,<br>சீரங்கராயர் ஓடை,<br>மேட்டுப்பாளையம் | ரூ.2100/- |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி தொகைகள் குழு நிர்ணயம் செய்த மாத வாடகை தொகை ரூ.2070/- ஐ விட கூடுதலாக கேட்டுள்ளதால் நகராட்சியின் நிதி இழப்பினை தவிர்க்கும் பொருட்டு கடையை ஒப்படைப்பு செய்ய அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம்

| | |
|---|---|
| 13 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் பாதாளச் சாக்கடை திட்டப்பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணி மேற்கொள்ளப்படுவதால் அனைத்து முக்கிய சாலைகளிலும் சேதம் அடைந்து உள்ளது. இதனால் மழைக்காலங்களில் பொதுமக்கள் வாகனங்கள் இயக்குவதற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள் மேலும் வடகிழக்கு பருவமழை தீவிரம் அடையும் என்பதாலும் பொதுமக்கள் நலன் கருதியும் முக்கிய சாலைகளுக்கு சாலைகளை சீரமைக்க (Patch Work) பணிகள் மேற்கொள்ள ரூ.2.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மன்ற அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம் |
| 14 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் உள்ள கால்வாய்கள் மற்றும் மழைநீர் கால்வாய்களை வரும் வடகிழக்கு பருவமழை விரைவில் துவங்க உள்ளது அடுத்து அனைத்து கால்வாய்கள் மற்றும் மழைநீர் வடிகால்களை தூரிவாரி தண்ணீர் தேங்காத வண்ணம் சீரமைக்கும் பொருட்டு கனரக JCB மற்றும் இதர வாகனங்கள் கொண்டு சுத்தம் செய்து அடைப்புகளை நீக்கி நடவடிக்கை எடுக்க மாவட்ட ஆட்சியர் ஆய்வு கூட்டத்தில் அறிவுறுத்தியதின் அடிப்படையில் இப்பணியினை மேற்கொள்ள ரூ.2.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மன்ற அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம் |

15 மேட்டுப்பாளையம் நகராட்சி தலைமை நீரேற்று நிலையம் மூன்று குடிநீர்த் திட்டங்களிலும் உள்ள சேறுகள் அகற்றவும் புதிதாக அளவு மாணி புதிய குடிநீர்த்திட்டத்தில் பொருத்தவும் 08.09.2019ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு 19.09.2019ல் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் முகவரி | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|
| 1 | M/s. சி.நாகராஜ்,<br>ராஜீவ் காந்தி நகர்,<br>மேட்டுப்பாளையம் | ரூ.5,00,000/- | ரூ 4,42350.87 |
| 2 | M/s. எம். வேலுசாமி,<br>6, E.B காலனி,<br>மேட்டுப்பாளையம் | ரூ.5,00,000/- | ரூ 4,39526.31 |

அலுவலகக் குறிப்பு :

மேலே பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.2ல் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி மற்றதை விட குறைவாக உள்ளதால் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருவாளர்கள் எம்.வேலுசாமி என்ற ஒப்பந்த்தாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க, குடிநீர் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி, தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

16 மேட்டுப்பாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அவ்வப்போது ஏற்படும் பம்பிங் மெயின் மற்றும் பகிர்மானக் குழாய் உடைப்பு சரி செய்யவும், பொதுக்கழிப்பிடம் மற்றும் பொதுக்குழாய்களுக்குத் தேவையான உதிரிச் சாமன்கள் விநியோகம் செய்யவும் 03.09.2019ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு 19.09.2019ல் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் முகவரி | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|
| 1 | M/s. எம். வேலுசாமி,<br>6, E.B காலனி,<br>மேட்டுப்பாளையம் | ரூ.2,00,000/- | ரூ 1,75082.70 |
| 2 | M/s. சி.நாகராஜ்,<br>ராஜீவ் காந்தி நகர்,<br>மேட்டுப்பாளையம் | ரூ.2,00,000/- | ரூ 1,75895.00 |

அலுவலகக் குறிப்பு :

மேலே பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி மற்றதை விட குறைவாக உள்ளதால் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருவாளர்கள் எம்.வேலுசாமி என்ற ஒப்பந்த்தாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க, குடிநீர் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி, தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

17. மேட்டுப்பாளையம் நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்தில் பயன்படுத்தப்பட்டு வரும் உயர் / நடு மின்னழுத்த மின் அமைப்புகள் Central Electricity Authority (Measures Relating to Safety and Electric Supply) Regulation 2010 ன் ஒழுங்கு முறை விதி 30ன் கீழ் டிசம்பர் 2019 திங்களில் மின் வாரியத்தால் ஆய்வு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளதற்கு ஆய்விற்கான கட்டணம் ரூ.3000/-ஆய்வு முன்பணமாக செலுத்துமாறு மின் ஆய்வாளர் கடித்த்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி தொகையினை மின் வாரியத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம்.

ந.க.எண்.3639/2019/இ1

18. இந்நகராட்சி பயன்பாட்டில் இருந்து வரும் JCB வாகனத்தில் உள்ள பழுதுகளை சரி செய்யப்பட ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.50/-இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம்.
ந.க.எண்.3639/2019/இ1

19. மேட்டுப்பாளையம் நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்திற்குத் தேவையான படிகரம் (Sulphate Alumina ferric) விநியோகம் செய்ய 20.08.2019ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு 10.09.2019ல் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் முகவரி | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|
| 1 | M/s.வைகை எலக்டிரிக்கல்ஸ், 231/90-ஏ முன்சீப் கோர்ட் ரோடு, திருமங்கலம் | ரூ.2,30,000/- | 2,22780/- |
| 2 | M/s. ஜெனரல் மார்கட்டிங் எண்டர்பிரைசஸ், 25,பெரியபள்ளிவாசல்தெரு, பழனி | ரூ.2.30,000/- | ரூ.2,23020/- |

அலுவலகக் குறிப்பு :
மேலே பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி மற்றதை விட குறைவாக இருந்தாலும் முன்வைப்புத் தொகை செலுத்தாமல் S.S.I சான்றிதழ் இணைக்கப்பட்டது. தவறாக உள்ளதால் மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ரத்து செய்து அதற்கு அடுத்து வழங்கியுள்ள நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கலாம் குடிநீர் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி, தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.2968/2019/அ5

20. மேட்டுப்பாளையம் நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்திற்குத் தேவையான படிகரம் (Sulphate Alumina ferric) விநியோகம் செய்ய M/s. ஜெனரல் மார்கட்டிங் எண்டர்பிரைசஸ், பழனி என்ற நிறுவனத்திற்கு 10.09.2019ல் பணி உத்தரவு வழங்கப்பட்டது. மீண்டும் 25.09.2019 ல் குறிப்பாணை வழங்கியும் 01.10.2019ல் இறுதி குறிப்பாணை வழங்கியும் மேற்படி நிறுவனமான M/s. ஜெனரல் மார்கட்டிங் எண்டர்பிரைசஸ் என்ற நிறுவனம் இதுவரை படிகாரம் விநியோகிக்காததால் மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ரத்து செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண்.2986/2019/அ5

21 இந்நகராட்சியில் அனைத்து பிரிவுகளுக்கும் தேவைப்படும் ஜெராக்ஸ் எடுப்பதற்கு ஜெராக்ஸ் மிசின் (Sharp Company) வாங்குவதற்கு மற்றும் இதர அலுவலக பயன்பாட்டிற்கு தேவைப்படும் எழுதுப் பொருட்கள் , டோனர்கள் ஆகியவற்றை வாங்குவதற்கு ஆகும் கூடுதல் செலவினம் ரூ.2.00 இலட்சம் தேவைப்படுவதால் அதனை தரமணி பெண்கள் எழுதுப்பொருள் மற்றும் அச்சக கூட்டுறவு சங்கம், சென்னை இந்நிறுவனத்திடமிருந்து ஜெராக்ஸ் மிசின் மற்றும் எழுது பொருட்கள் வாங்கிக் கொள்ள தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களது அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண்.708/2019/டி1

22 மேட்டுப்பாளையம் நகராட்சியில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் 1000-றக்கும் மேற்பட்ட மாணவிகள் பயின்று வருவதால் கூடுதல் கழிவறைகள் தேவைப்படுவதால் பள்ளி மராமத்து பணிகள் மற்றும் கூடுதல் கழிவறைகள் தேவைப்படுவதால் மேற்கண்ட பள்ளிக்கு பணியை மேற்கொள்வதற்கு ரூ.9.90 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணியைமுடிக்க கல்வி நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்

| | |
|---|---|
| 23 | இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் டி.என்.40எம் – 9703 சில பழுது பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. இப்பழுது பணிகள் மேற்கொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ.30,000/-த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம் |
| 24. | மேட்டுப்பாளையம் நகராட்சி உரக்கிடங்கில் தயாரிக்கப்பட்டு உரம் மற்றும் சேகரிக்கப்படும் குப்பையின் தன்மை உரத்திடலைச் சுற்றியுள்ள பகுதிகளில் நீர் மற்றும் காற்று மாசுபடுவதற்கான சாத்தியக் கூறுகள் ஏதேனும் உள்ளனவா என்பது நீர் மாதிரியின் பரிசோதனை மேற்கொள்ளவும் மேற்கண்ட பரிசோதனை முடிவின் நகல் அனுப்பி வைக்கவும் கோவை மாவட்டச் சுற்றுச்சூழல் பெறியாளர் (தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்) அவர்களைக் கேட்டு கடிதம் அனுப்பப்பட்டது.<br><br>தற்போது நீர் மாதிரி பரிசோதனை முடிவு தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்திலிருந்து வரப்பெற்றுள்ளது. மேலும் இதற்கான கட்டணம் ( Analysis Charge) ரூ.4160/- (ரூபாய் நான்காயிரத்து நூற்றி அறுபது மட்டும்) தொகைக்கான வங்கி வரைவோலை அனுப்பவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட தொகை ரூ.4160/-க்கான செலவினத்திற்கு தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** :<br>குடிநீர் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை ஏற்கலாம்<br>ந.க.எண்.4140/2015/அ5 |
| 25 | இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் டி.என்.40 – 3711 தகுதிச் சான்றிதழ் பெற வேண்டி சில பழுது பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. இப்பழுது பணிகள் மேற்கொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ.1.20/-இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம் |
| 26 | நகராட்சி நிர்வாக ஆணையர் , சென்னை அவர்களின் கடித ந.க.எண்.2868/2018/டிபி2, நாள்.06.08.2019 மற்றும் 12.09.2019ல் உள்ளாட்சிகளில் விளம்பரங்களை முறைப்படுத்துவதற்கான நடைமுறை விளம்பரப் பலகைகள் நிறுவ அனுமதி ஆகியவற்றிற்காக அரசாணைகளும் வரிவிதித்தல் மற்றும் வரிவசூலித்தல் விதிகள் -2003 க்கான விதிதிருத்தங்கள் வெளியிடப்பட்டு தமிழ்நாடு அரசிதழில் பிரசுரம் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, கீழ்க்காணும் அரசாணைகளும் தமிழ்நாடு அரசிதழும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>அரசாணைகள்<br>1. அரசாணை (4D) எண்.2 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MC1) நாள்.05.06.2018<br>2. அரசாணை எண் 15, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை ( MC1) நாள்.30.01.2019<br>3. அரசாணை எண்.17, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.31.01.2019<br><br>மேற்படி அரசாணைகளில் விளம்பரப்பலகைகள் மற்றும் பிளக்ஸ் பேனர்கள் வைக்க அனுமதி வழங்குவது குறித்து கட்டணங்கள் மற்றும் விபரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br><br>மேற்படி அரசாணையில் உள்ளாட்சிகள் விளம்பரப்பலகை அனுமதித்தல், வரிவிதித்தல் மற்றும் வரிவசூலித்தல் 2003 க்கான விதி திருத்தங்கள் கீழ்க்கண்ட தமிழக அரசிதழில் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது.<br>1. தமிழ்நாடு அரசிதழ், சென்னை எண்.252, நாள்.16.07•2018 திங்கட்கிழமை<br>2. தமிழ்நாடு அரசிதழ் சென்னை எண்.39, நாள்.31.01.2019 வியாழக்கிழமை<br><br>அலுவலகக் குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்.<br>ந.க.எண். 3229/2019/எப்1 |

| | |
|---|---|
| 27 | நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர் , திருப்பூர் அவர்களின் 17.09.2019ம் தேதியன்று நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் நகராட்சிக்குச் சொந்தமான இடங்களில் மட்டுமே நிரந்தரமான விளம்பரங்கள் செய்ய உரிய இடங்களில் தேர்வு செய்யப்பட்டு அந்த இடத்தின் அணுகுசாலையின் அகலத்திற்கு ஏற்ப அரசாணைகளில் குறிப்பிட்டுள்ள விதிகளின்படி விளம்பரத்தின் அளவுகள் நிர்ணயம் செய்யப்பட வேண்டும் , அவ்வாறு நிர்ணயம் செய்யப்படும் இடங்கள் தவிர மற்றொரு இடங்களில் நகராட்சியின் அனுமதியின்றி விளம்பரம் செய்யக் கூடாது, அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டது.<br><br>மேலும் மேற்கண்ட தேர்வு செய்யப்படும் இடத்தினை நகராட்சியின் மூலம் (Committee) விளம்பரங்கள் முறைப்படுத்துவதற்கான குழு ஏற்படுத்தப்பட்டு அக்குழுவின் மூலம் இடம் தேர்வு செய்து அதனை குழு மூலம் பரிந்துரை செய்யப்பட்டு மாவட்ட ஆட்சியரின் ஒப்புதல் பெறப்பட வேண்டும். அவ்வாறு ஒப்புதல் பெறப்பட்டு விளம்பரம் செய்ய உத்தேசிக்கப்படும் இடங்களை விளம்பரம் செய்வதற்கான நிறுவனத்தை தேர்ந்தெடுக்க பொது ஒப்பந்தப்புள்ளி விடப்பட்டு டெண்டர் மூலமே விளம்பரம் செய்ய அனுமதிக்கப்பட வேண்டும். தனியார் மற்றும் எந்த நபருக்கும் தன்னிச்சையாகவே விளம்பரம் செய்ய அனுமதிக்கக்கூடாது எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.<br><br>நகராட்சிப்பகுதியில் நகராட்சிக்குச் சொந்தமான இடங்களில் விளம்பரங்கள் செய்ய தகுதியான இடத்தினை தேர்வு செய்ய விளம்பரங்களை முறைப்படுத்துவதற்கான கீழ்க்கண்டவாறு குழு (''Advertisement Regulatory Committee'') உறுப்பினர்களை நியமனம் செய்யலாம்.<br><br>1). நகராட்சிப்பொறியர் – மேட்டுப்பாளையம் நகராட்சி<br>2). நகரமைப்பு ஆய்வாளர் – மேட்டுப்பாளையம் நகராட்சி<br>3). வருவாய் ஆய்வாளர் - மேட்டுப்பாளையம் நகராட்சி<br>4). போக்குவரத்து காவல் ஆய்வாளர், காவல் நிலையம்- மேட்டுப்பாளையம்<br><br>மேலும் மேற்படி குழு விளம்பரம் செய்ய தேர்வு செய்யப்படும் இடத்தினையும் அதன் விபரங்களையும் சம்மந்தப்பட்ட நிறுவனங்களுக்குத் தெரிவித்து நடவடிக்கை எடுக்கவும்“Nodal Officer” ஆக நகரமைப்பு அலுவலரை (பொ) நியமனம் செய்யலாம்.<br><br>மேற்கண்ட விளம்பரம் செய்ய முறைப்படுத்துவதற்கான குழு உறுப்பினர்கள் மூலம் தேர்வு செய்யப்பட்ட இடத்தினை மாவட்ட ஆட்சியரிடம் அனுமதி பெறவும், மேற்கண்ட குழுவினை அமைக்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண்.3229/2019/எப்1 |